பத்திரிக்கை செய்தி

வீட்டு வரியை மதிப்பீடு செய்வதற்கு ரூ.15,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய ஊராட்சி செயலாளர் கைது

புகார்தாரர் திரு.கார்த்திகேயன், பனையக்குறிச்சி கிராமம், திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது வீட்டிற்கு வரி மதிப்பீடு செய்வதற்காக ஊராட்சி செயலாளர் அலுவலகம், திருவெறும்பூர் ஒன்றியம், பனையக்குறிச்சி கிராமம், திருச்சி மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.கே.சி.மாரியப்பன், ஊராட்சி செயலாளர், திருவெறும்பூர் ஒன்றியம், பனையக்குறிச்சி கிராமம், திருச்சி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருச்சி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 23.06.2026, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கே.சி.மாரியப்பன், ஊராட்சி செயலாளர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.